# யாழ்ப்பாண நகரபிதாவின் கைது தொடர்பாக மா.கொ.நி இன் அறிக்கை

***ஏப்பிரல் 9 ஆம் திகதி, 2021, கொழும்பு, இலங்கை.*** யாழ்ப்பாண நகரபிதா, திரு. விஸ்வலிங்கம் மணிவண்ணன், 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (தற்காலிக ஏற்பாடுகள்) கீழ் கைது செய்யப்பட்டதை, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கண்டனம் செய்கின்றதுடன், அவரின் உடனடியான விடுதலைக்கும் கோருகின்றது.

கைது தொடர்பான விபரங்கள் போதுமானவையாக இல்லாதுள்ளன, எனினும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வெளியிட்ட அறிக்கை மற்றும் இன்று (ஏப்பிரல் 9 ஆம் திகதி) பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட கூற்றுகளின் அடிப்படையில் பார்க்கையில், யாழ்ப்பாண மாநகர சபையில் பணியாற்றும் பல ஆட்களினால் அணிந்திருந்த சீருடை தொடர்பான அடிப்படையில் இக்கைது மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிய வருகின்றது. இந்தச் சீருடை ''யுத்த காலத்தின் போது உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல் படை அணிந்திருந்த சீருடையை ஒத்ததாக இருந்தது'' என பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் கூற்று குற்றம்சாட்டியது, ஆனால் என்ன ஒத்த தன்மைகள் இருந்தன என்பது குறித்து சிறிதளவான விபரங்களையே அது அளித்தது. மக்கள் பாதுகாப்பு அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரிலேயே கைது மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

விபரங்கள் தெளிவற்றதாக இருக்கின்ற வேளையில், அதன் முதல் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, இது யாழ்ப்பாண மாநகரசபை உருவாக்கிய ஒரு பிரிவின் செயற்பாடுகள் குறித்தான ஒரு சர்ச்சை எனக் காணப்படுகிறது. அவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைகளை அரசியலமைப்பும் மற்றும் ஏனைய சட்டங்களும் வழங்குகின்றன. அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்ட அரசாங்க நிறுவனங்கள் மீது தனது அதிகாரத்தை முத்திரை குத்துவதற்காகவும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளை அவ்வாறான பலவீனமான அடிப்படையில் தடுத்து வைப்பதற்கும் பயங்கரவாத் தடைச்சட்டம் போன்ற குற்றவியல் சட்டவாக்கங்களை அரசாங்கம் நாடுவது மிகவும் கவலைக்குரியதாகும். குற்றச் சாட்டுகளின்றியும் மற்றும் பாதுகாப்புக்கு உரிய செயல்முறைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வழிவகைகளுடன் நீண்ட காலங்களுக்கு தடுத்து வைத்திருப்பதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் உபயோகம் குறித்து ஆழமான கவலைகளை மா.கொ.நி பல தசாப்தங்களுக்கும் மேலாகக் குறிப்பிட்டு வந்துள்ளது. இது ஒரு கொடூரமான சட்டமென்பதுடன் ஜனநாயகத்தில் அதற்கு இடமில்லை. மேலும், ஜனநாயக நடைமுறைகளுக்கு மதிப்பளிப்பதற்கு மற்றும் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்ட அரசாங்க நிறுவனங்களுடன் எழக்கூடிய சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு குற்றவியல் சட்டங்களை உபயோகிப்பதிலிருந்து விலகியிருப்பதற்கும் அரசாங்கத்தை மா.கொ.நி கோருகிறது. அவ்வாறான ஜனநாயக விரோத நடவடிக்கைகள் தேவையற்றவை என்பதுடன், கடந்த காலங்களில் காணப்பட்டவாறு, இலங்கைத் திருநாட்டில் நீண்ட கால அமைதி மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கு அவை எதிரானவையாகும்.

***இற்றைப்படுத்தல்/ ஏப்பிரல், 10 ஆம் திகதி, கொழும்பு, இலங்கை:*** ஊடகங்களின் ஆரம்ப அறிக்கைகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாண நகரபிதா கைது செய்யப்பட்டமை தொடர்பாக அறிவித்த போதிலும், நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்தான தகவல்கள், தண்டனைச் சட்டக் கோவை உபயோகிக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றன. பின்னதாக, வெள்ளிக்கிழமை இரவு, யாழ்ப்பாண நகரபிதா பிணையில் விடுதலை செய்யப்பட்டதையும் மா.கொ.நி கவனத்தில் கொள்கிறது. இருந்த போதிலும், இந்த முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னர் வெளியிடப்பட்ட அதன் அறிக்கையில் மா.கொ.நி ஆல் எழுப்பப்பட்ட கரிசனைகள் தொடர்ந்தும் வலுவுள்ளவையாக இருக்கின்றன.